


## கைதான ஹம்பாலி என்ன ஆனார்?

இதற்கு பதில்கள் இரண்டு. கைது செய்த கையோடு அவரை அமெரிக்க உளவுத்துறையான சி.ஐ.ஏ.விடம், இந்தோனேஷியக் காவல்துறை ஒப்படைத்துவிட்டது என்பது முதல் பதில். (செப்டம்பர் 11 சம்பவத்தில் அவர் மிக முக்கியக் குற்றவாளிகளுள் ஒருவர் என்பதனால்.) இரண்டாவது பதில், அப்படி ஒப்படைக்கப்பட்ட ஹம்பாலியை சி.ஐ.ஏ., க்யூபாவுக்கு அருகே ஒரு குட்டித் தீவில், ரகசியச் சிறையில் அடைத்து விசாரிக்கத் தொடங்கியது என்பது.

அவரது கைதுச் செய்தி மட்டும்தான் மீடியாவுக்கு வந்தது. சி.ஐ.ஏ. அவரை எங்கே கொண்டு போயிருக்கிறது, என்ன விசாரிக்கிறார்கள், ஹம்பாலி என்ன பதில் சொன்னார் அல்லது சொன்னாரா என்பதெல்லாம் வெகு நாட்களுக்கு சஸ்பென்ஸாகவே இருந்தன.

இதனிடையில், இராக்கில் போர்க் கைதிகளை அமெரிக்க பிரிட்டிஷ் கூட்டு ராணுவம் படுத்துகிற பாடுகள் எல்லாம் பேப்பரில் வந்துவிட, கைதிகளை அவர்கள் நடத்தும் விதம் சர்வதேச அளவில் ஒரு பெரும் விவாதப் பொருளாகி, ஜார்ஜ் புஷ்ஷின் இமேஜ் டேமேஜ் ஆகத் தொடங்கியது. உலகில் எங்கெல்லாம் அமெரிக்கா தன்னுடைய ரகசியச் சிறைச் சாலைகளை நிறுவியிருக்கிறது, எங்கெங்கே யார் யார் இருக்கிறார்கள் என்று புலனாய்வு ஏஜென்சிகள் தேடத் தொடங்கின. பத்திரிகைகளும் தம் பங்குக்குப் பாதி உண்மையாகவும் பாதி கற்பனையாகவும் நிறைய தகவல்களையும் வதந்திகளையும் அள்ளிப் போட ஆரம்பித்தன.

ஏற்கெனவே இராக் விவகாரத்தில், அமெரிக்காவின் கெட்ட பெயர் மேலும் கெட்டுக் குட்டிச்சுவரான பெயராகிப் போய்விட, சில தற்காப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொருட்டு, ஒரு சில முக்கியமான கைதிகளை மட்டும் ரெகுலர் சிறைகளுக்கு மாற்றிவிட முடிவு செய்தார்கள். ஆனால், அறிவிப்பு ஏதும் கிடையாது.

அந்த வகையில் க்யூபாவுக்குப் பக்கத்தில் எங்கோ இருந்த ஹம்பாலி, திடீரென்று ஒருநாள் ராவோடு ராவாக ஜோர்டனுக்கு மாற்றப் பட்டார். இந்த விஷயம் யாருக்கும் தெரியாது என்று அமெரிக்கா நினைத்துக்கொண்டிருக்க, ‘ஹாரெட்ஸ்’ (Haaretz) என்கிற ஹீப்ரு மொழிப் பத்திரிகை (இப்பத்திரிகையின் சுருக்கிய வடிவம் ஆங்கிலத்திலும் மொழிபெயர்க்கப்பட்டு, இண்டர்நேஷனல் ஹெரால்ட் டிரிப்யூன் இதழுடன் சேர்த்து விநியோகமாகிறது.) போட்டு உடைத்துவிட்டது.

அந்தச் செய்தி தெரியும் வரை ஜமா இஸ்லாமியாவின் மத்தியக் கிழக்கு ஏஜெண்டுகளும் நண்பர்களும் நல்லுறவு நேசர்களும் வரிந்து கட்டிக்கொண்டு, ஹம்பாலியின் இருப்பிடம் குறித்துத் தகவல் தேடிக் கொண்டிருந்தார்கள். ஒரு துண்டுச் சீட்டு வந்துவிடாதா என்று இருபத்து நான்கு மணிநேரமும் விழிப்புடன் காத்திருந்தார்கள்.

வரத்தான் செய்தது. துண்டுச் சீட்டல்ல. ஹம்பாலியின் வாக்குமூலங்கள் என்கிற பெயரில் பக்கம் பக்கமாகக் காவல்துறை அறிக்கைகள்! அல் காயிதாவுடனான தொடர்பு, 9/11 சம்பவத்தின் பின்னணி விவரங்கள், அதில் ஜமாவுக்கு இருந்த பங்கு, அல் காயிதா மூலம் ஜமா இஸ்லாமியா பெற்ற- பெற்றுக்கொண்டிருக்கிற நிதி உதவி குறித்த தகவல்கள், கிழக்காசிய நாடுகளில் அல் காயிதாவுடன் இணைந்து அவர்கள் செய்ய இருந்த நாசகாரியங்கள் குறித்த விவரங்கள், அவை செயல்படுத்தப்படாமல் போனதற்கான காரணங்கள் இன்னபிற பல அரிய உண்மைகள் வெளிவந்ததற்கும் - இந்தத் தொடரில் இத்தனை பக்கங்கள் ஜமா இஸ்லாமியா குறித்து எழுத முடிந்ததற்குமே ஹம்பாலியின் வாக்குமூலங்கள்தான் முக்கியக் காரணம்.

அமெரிக்கச் சிறைகளில் கைதிகள் எப்படி விசாரிக்கப்படுவார்கள் என்பதற்குப் பெரிய விளக்கங்கள் எதுவும் வேண்டாம் அல்லவா? இராக் சிறைக்காட்சிகள் புகைப்படங்களாக வந்தது நினைவிருக்குமே? இராக்கில் மட்டுமல்லாமல், உலகமெங்கும் இருக்கும், இயங்கும் அமெரிக்கச் சிறைகளில் கையாளப்படும் உத்திகள் அவைதான். இதில் சந்தேகமில்லை. மனித உரிமை மீறல் என்பதை ஒரு கலையாகப் பயின்றுவரும் தேசம் அது. ஆனாலும் மிகப்பெரிய ஜனநாயக தேசம். அதில் சந்தேகமில்லை.

ஹம்பாலியின் கைதுக்குப் பின் ஜமா இஸ்லாமியாவின் செயல்பாடுகள் வெகுவாகக் குறைந்துவிட்டன. அநேகமாக, கூடாரத்தை காலி பண்ணும் விதமாகப் பெரும்பாலான போராளிகளை இந்தோனேஷிய, மலேசியக் காவல் துறையினர் கைது செய்துவிட்டார்கள். அதில் பாதிப் பேர் அமெரிக்கச் சிறைகளுக்குப் போக, மீதிப் பேர் அந்தந்த தேசத்துச் சிறைச்சாலைகளிலேயே சொச்ச காலத்தைக் கழிக்க வேண்டியதாகிவிட்டது.

முன்னதாக, 1998-ல் இந்தோனேஷிய அதிபர் சுஹர்தோ பதவி விலகிவிட, தைரியமாக இந்தோனேஷியாவுக்கு வந்த அபூபக்ர் பஷீர், இந்தோனேஷியன் முஜாஹிதீன் கவுன்சில் என்கிற அமைப்பைத் தோற்றுவித்து, அதன் தலைவராகப் பதவியேற்றுக் கொண்டிருந்தார். பெயரளவில் முஜாஹிதீன் கவுன்சிலாக இருந்தாலும், தனக்கு தீவிரவாதத்தில் சற்றும் நாட்டமில்லை என்றும் ஜமா இஸ்லாமியாவின் தாக்குதல் நடவடிக்கைகளோடு தொடர்பில்லை என்றும் அறிவித்திருந்தார்.

அது ஒரு வகையில் உண்மையும் கூட. ஜமா இஸ்லாமியாவை ஒரு முழுமையான தீவிரவாத இயக்கமாக மாற்றியது ஹம்பாலிதான். பஷீர் காலத்தில் அது ஒரு சாதாரண எதிர்ப்பு இயக்கமாக மட்டுமே இருந்தது. தவிரவும், ஏற்கெனவே அவர் பெற்றிருந்த கல்வியாளர் இமேஜ், தீவிரவாதக் குழுத்தலைவராக அவரை நினைத்துப் பார்க்கவிடாமல் கணிசமாகத் தடுத்தது.

பஷீர் இப்படிப் போக, அவருடன் இந்தோனேஷியா வந்த அப்துல்லா சுங்கர், எதிர்பாராவிதமாக மரணமடைந்துவிட, ஜமா இஸ்லாமியா ஒரு சரியான தலைவர் இல்லாமல் தள்ளாடத் தொடங்கியது. இரண்டாம் கட்டத் தலைவர்களாக அறியப்பட்ட ஹஸாரி ஹுசைன் (Azhari Husin), முஹம்மது நூருத்தீன் (Mohammad Noordin) போன்றவர்கள் அல் காயிதாவின் உதவியும் இல்லாமல், ஹம்பாலியின் இருப்புமில்லாமல் இயக்கத்தைக் கொண்டு செல்ல முடியாதவர்களாக இருந்தார்கள்.

இருப்பினும், தம் இருப்பை ஸ்தாபித்துக் கொள்வதற்காக வருஷத்துக்கு ஒன்று என்கிற அளவிலாவது ஏதாவது சதித்திட்டம் தீட்டாமல் இல்லை. அப்படித்தான் 2004 செப்டம்பரில், ஜகார்த்தாவில் உள்ள ஆஸ்திரேலிய தூதரகத்தின் வாசலில் ஒரு கார் குண்டுத் தாக்குதலை மேற்கொண்டார்கள். மூன்று பேரைக் கொன்றுவிட்டு நூற்றுப் பத்து பேரைக் காயத்துக்கு உள்ளாக்கிய தாக்குதல் அது.

அதன்பின், மீண்டும் ஒரு வருடம் இருக்குமிடமே தெரியாமல் இருந்தது. அக்டோபர் 1, 2005-ம் ஆண்டு மீண்டும் அதே பாலியில் ஒரு தற்கொலைத் தாக்குதல். முந்தைய பாலி குண்டுவெடிப்புச்

சம்பவத்தைத் தூக்கிச் சாப்பிடும்படியாக இது இருக்கவேண்டுமென்பதுதான் ஜமா இஸ்லாமியாவின் நோக்கம். கவனமாக மூன்று இடங்களைத் தேர்ந்தெடுத்தார்கள். வழக்கமான ரசாயன குண்டாக அல்லாமல், இம்முறை புராதனமான 'பால் பேரிங்' குண்டுகளையே பயன்படுத்த முடிவு செய்தார்கள். முந்தைய பாலி குண்டு வெடிப்புச் சம்பவத்தைப் போலவே இங்கும் தற்கொலைப்படை வீரர்கள் மூவர். அதே மாதிரியான ஹோட்டல் வளாகம். அதே மாதிரியான தாக்குதல் உத்தி.

நேரத்தில் மட்டும் மாறுதல். இம்முறை மாலை ஆறே முக்காலுக்கே ஆரம்பித்து, ஏழே காலுக்குள் கடையைக் கட்டிவிட்டார்கள்.

மூன்று குண்டுகளும் அச்சுப் பிசகாமல் வெடித்தன.

இத்தனைக்கும் முந்தைய மூன்று மாதங்களாக இந்தோனேஷியாவின் மூலை முடுக்கெல்லாம் தீவிரவாதத் தாக்குதல் நடக்கலாம் என்று உளவுத்துறையினர் எச்சரித்துக் கொண்டே இருந்தார்கள். நாளிதழ்கள் பக்கம் பக்கமாக கேள்விக்குறியுடன் கட்டுரைகள் வெளியிட்டுக் கொண்டே இருந்தன.

அமெரிக்க உளவுத்துறையும் ஆஸ்திரேலிய உளவுத்துறையும் கூட ஒரு பயங்கரத் தாக்குதலுக்கான எச்சரிக்கை சங்கை ஊதிக்கொண்டே இருந்தன.

ஆனாலும் பிரயோஜனமில்லாமல் போய்விட்டது. மூன்று குண்டுகள் வெடித்தன. இருபது பேர் இறந்து போனார்கள். சுமார் 125 பேர் மருத்துவமனையில் ரத்தக் காயங்களுடன் சேர்க்கப்பட்டார்கள்.

ஒரு விஷயம் சொல்லவேண்டும். மேற்படி குண்டு வெடிப்புச் சம்பவம் நடந்ததும், முன்னைப்போல் உடனடியாக இது ஜமா இஸ்லாமியாவின் சதி என்று இந்தோனேஷியக் காவல் துறை அறிவிக்கவில்லை. இப்படியொரு அதி தீவிரத் தாக்குதல் நடத்துமளவு, ஜமாவில் இப்போது ஆள் பலம் கிடையாது என்றுதான் அவர்கள் நினைத்தார்கள். பொதுவில் தீவிரவாதிகளுக்கு எச்சரிக்கை விடுக்கும் வழக்கமான அறிக்கைகள்தான் வெளியாகிக் கொண்டிருந்தன.

ஆனால், புலனாய்வில் இறங்கிய அதிகாரிகளுக்கு ஒரு அமெச்சூர் வீடியோ படம் கிடைத்தது.

குண்டு வெடித்த ஹோட்டல் ஒன்றில், யாரோ சுற்றுலாப் பயணி சும்மா ஜாலிக்காக எடுத்துக் கொண்டிருந்தது அது.

குண்டு வெடிப்புக்குச் சில வினாடிகள் முன்பு வரையிலான காட்சிகள் அதில் பதிவாகியிருந்தன. ஒரு நபர் முதுகுப் பக்கம் என்னமோ மறைத்த சுமையுடன் உள்ளே வருவதுடன் அந்த வீடியோ நிற்க, அந்த ஆளை வட்டமிட்டு, பட்டியலில் உள்ளவர்களோடு ஒப்பிட்டுப் பார்த்தபோதுதான், அவன் ஒரு ஜமா போராளி என்பதும், நிகழ்த்தியதும் அவர்கள்தான் என்பதும் தெரிய வந்தன.

உடனடியாக ஜமாவின் அப்போதைய சீனியர் கமாண்டர்களான முஹம்மது நூருதீனுக்கும் ஹஸாரி ஹுசைனுக்கும் குறிவைத்து வலைவிரிக்க ஆரம்பித்தார்கள். யார் யாரோ சிக்கினார்கள். தேடிய இருவரும் அகப்படவில்லை. கடும் முயற்சிக்குப் பிறகும் பெரிய தலைகள் யாரும் அகப்படாததில் கடுப்பான காவல் துறை, திடீரென்று அமைதிப் போராளியாக மட்டுமே காட்சியளிக்கத் தொடங்கியிருந்த அபூபக்ர் பஷீரைப் பிடித்து விசாரிக்க முடிவு செய்தது. என்ன இருந்தாலும் ஜமா இஸ்லாமியாவின் ஆன்மிகத் தலைவர் அல்லவா?

ஆனால், பஷீர் மிகக் கடுமையான அறிக்கை ஒன்றை வெளியிட்டார். தாக்குதலுக்கு முதற்கண் கண்டனம். அதுமட்டுமல்லாமல், இந்தோனேஷிய அரசுக்கு ஒரு பகிரங்க எச்சரிக்கை.

‘இது இறைவனின் சித்தம். தன்னைவிட்டு வெகு தூரம் விலகிச் செல்லும் அரசுக்கு அவராக அளித்திருக்கும் தண்டனை. இந்தோனேஷிய அரசாங்கம் இறைவனுக்கு நெருக்கமாகச் செல்லும் பாதையைத் தேர்ந்தெடுத்து ஆட்சி செய்யுமானால் இம்மாதிரியான சங்கடங்கள் நேராமல் தடுக்கலாம்.’

முற்றிலும் வாழைப்பழம், விளக்கெண்ணெய் ரக அறிக்கைதான் என்றாலும், இதையும் பொருட்படுத்தி வாரக்கணக்கில் மக்கள் விவாதிக்கவே செய்தார்கள்.

இன்னும் தேடிக்கொண்டுதான் இருக்கிறார்கள்; இன்னும் அச்சத்தில் மிச்ச சொச்சம் இருக்கத்தான் செய்கிறது. ஆனால், அதற்குப்பின் இன்றுவரை ஜமாவின் பெயரில் வேறெந்த பயங்கரவாத நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரியவில்லை.

கிழக்காசிய நாடுகளின் மிக முக்கியமான பிரச்னை, இத்தகைய இயக்கங்களுக்குப் பொதுமக்களிடையே இருக்கும் அனுதாபமும் ஆதரவு அலையும் தான். மெஜாரிடி மக்கள் முஸ்லிம்களாகவும், அரசாங்கம் அமெரிக்க ஆதரவு நிலைப்பாடு எடுக்க வேண்டியும் இருந்தால், கண்டிப்பாக இத்தகைய அதர்ம சங்கடங்கள் தோன்றவே செய்கின்றன.

இரும்புக்கரம் கொண்டு ஒடுக்க நினைக்கும் அரசுக்குச் சில சமயங்களில் மட்டும்தான் வெற்றி கிடைக்கிறது. பெரும்பாலும் பலத்த இழப்புகளுக்குப் பிறகே அவர்கள் விழித்துக் கொள்கிறார்கள். இந்தோனேஷியா என்றில்லை. மலேசியா, தாய்லாந்து, கம்போடியா என்று கடலில் மணல் திட்டுகள் இருக்கிற இடங்களிலெல்லாம் இவர்கள் பரவியிருக்கிறார்கள்.

பயங்கரவாதக் கும்பல், ஆயுதக் கடத்தல் கும்பல், போதைக் கடத்தல் கும்பல், அடியாள் கும்பல், தீவிரவாத நெட் ஒர்க்குக்கு டெக்னாலஜி சப்ளை செய்யும் கும்பல் என்று இவர்களுள் பல ஜாதிகள் உண்டு. பெரியதும் சிறியதுமாக ஆசியாக் கண்டம் முழுவதும் பரவியிருக்கும் இவர்கள் அனைவரும், பெரும்பாலும் மத்தியக் கிழக்குக் குழுக்கள் மூலம் ஆயுத பலமும் பயிற்சி பலமும் பெறுகிறார்கள்.

இன்றைய சூழலில் பெரும்பாலான மத்தியக் கிழக்கு நாடுகள், அமெரிக்காவின் நிழலுக்குள் வந்துவிட்டபடியாலும், சதாம் போன்ற அமெரிக்க எதிர்ப்பாளர்கள் சமாதிக்குள் உறங்கிவிட்டபடியாலும், அங்கே செய்ய நினைத்து முடியாமல் போகிற காரியங்களை, கிழக்காசியா மற்றும் தெற்காசியாவில் செய்து பார்க்க இந்த இயக்கங்கள் முனைப்புடன் பாடுபடுகின்றன. மத்தியக் கிழக்கு அரசியலில் தலையிடும் அளவுக்கு, ஆசியாவின் ஏனைய பகுதிகளின் அரசியலில் அமெரிக்கா இப்போதைக்கு அத்தனை சுலபத்தில் மூக்கைக்கூட நுழைக்க முடியாது என்பது இவர்களுக்கு ஒரு வசதி. 2002 பாலி குண்டு வெடிப்புச் சம்பவத்துக்கு முந்தைய தினம் வரை, ஜமா இஸ்லாமியாவையே அமெரிக்கா தன் தடை செய்யப்பட்ட இயக்கங்களின் பட்டியலில் வைத்திருக்கவில்லை என்பதை இங்கே நினைவு கூரலாம்.

இந்த நிமிடம் ஜமா இஸ்லாமியா செயல்படாமல் இருப்பது பற்றிச் சற்று நிம்மதியடையலாமே தவிர, நிரந்தரமாக சந்தோஷப்படுவதற்கு இடமே இல்லை.

(ஜமா இஸ்லாமியா முற்றும். அடுத்தது தொடரும்)